O.S. No: 73/2017

பெயர் : சிவக்குமார்

**வா.சா. 2**

23-07-2025

**குறுக்கு விசாரணை**

அய்யப்பன் எனக்கு உறவு முறை கிடையாது. அய்யப்பன் நானும் ஒரே ஊரில் தான் இருக்கிறோம். அய்யப்பனுக்கு வண்ணக்குடி கிராமத்தில் தனியாக சொத்து எதுவும் கிடையாது. ஆரம்பத்தில் இந்த சொத்து கலியமூர்த்திக்கு சொந்தமானது என்றால் ஆமாம். அதன்பிறகு முதல் பிரதிவாதி கௌதமி கிரையம் வாங்கிவிட்டார் என்றால் இல்லை. கலியமூர்த்திக்கு மனைவி உயிருடன் இன்னும் இருக்கிறார் என்றால் சரி. கலியமூர்த்திக்கும் அவரது மனைவிக்கும் வாரிசு கிடையாது என்றால் ஆமாம். நான் உயிலில் சாட்சியாக கும்பகோணம் ஸ்ரீநகர் காலனியில் வைத்து கையெழுத்து போட்டேன். வண்ணக்குடிக்கும் திருவிடைமருதூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் இடையே 1 கிமீ தூரம் இருக்கும். வண்ணக்குடியில் இருந்து கும்பகோணத்திற்கு 12 கிமீ தூரம் இருக்கும். என்னை சாட்சி கையெழுத்து போட அய்யப்பன் தான் அழைத்து வந்தாரா என்றால் கலியமூர்த்தி அழைத்து வந்தார் . வயதான காலத்தில் கலியமூர்த்தியிடம் பணம் இருக்க வாய்ப்பில்லை என்றால் சரி . அவர் அதற்கெல்லாம் பணம் வைத்திருந்தார் . நான் சாட்சி கையெழுத்து போட்ட போது மதியானம் இருக்கும். நேரம் நினைவில்லை. உயிலில் நான் கையெழுத்து போடும் போது கலியமூர்த்திக்கு 70 வயது இருக்கும். அவருக்கு கை கால் நடுக்கம், மயக்கம் இருந்ததா என்றால் இல்லை. நன்றாக இருந்தார். இன்னொரு சாட்சியாக கையெழுத்து போட்டவர் கண்ணன் . நான், கலியமூர்த்தி, கலியமூர்த்தி மனைவி, கண்ணன் ஆகிய நான்கு பேரும் ஒன்றாகதான் வந்தோம் . நான் சொன்னதெல்லாம் பொய் என்றாலும் சொத்தை 1, 2 பிரதிவாதகளிடமிருந்து அபகறிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன்

என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி காவல் துறையில் பணியாற்றுகிறார் என்றால் ஆமாம். அவருடைய கணவர் போர்வெல் வைத்து வசதியாக இருக்கிறார் என்றால் தெரியாது. 1, 2 பிரதிவாதிகளிடம் மோசடியாக உயில் தயார் செய்து பணம் அபகறிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வாறு வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.